C.P. 45/2018 **date** 10.10.2019

R.W.1 சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை

நான் கடந்த 31.07.2014 தேதியன்று பணி ஓய்வு பெற்றேன் என்றால் சரிதான். பணியில் இருந்து ஓய்வு பெறும் போது என்ன பணியில் இருந்தேன் என்றால் போக்குவரத்து ஆய்வாளராக பணிபுரிந்தேன். நான் கோரிக்கை மனுவில் ஓய்வு ஊதிய நிலுவை தொகை மற்றும் முன்கூட்டு தொகை ஆகியவை கேட்டு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். ஓய்வுதிய தொகையாக ரூ.1,18,978/- ட்டும் முன்கூட்டு தொகை நிலுவையாக ரூ.2,34,013/- தொகையும் எவ்வாறு கணக்கீட்டு செய்துள்ளேன் என்பதை காட்ட ஆதாரம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாக்கல் செய்துள்ளேன். என்ன ஆவணம் கொடுத்துள்ளேன் என்றால் தொழிலாளர் நல ஆணையரின் உத்தரவை நான் தாக்கல் செய்துள்ளளேன். தொழிலாளர் துணை ஆணையரிடம் பணிக் கொடை வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த வழக்கின் அடிப்படையில் குறைவான தொகை வழங்கியுள்ளதால் அதையும் நான் கோரியுள்ளேன். அகவிலைப்படி எத்தனை சதவிகிதம் கணகீடு செய்துள்ளேன் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை.01.09.2010 ல் அமல்படுத்தப்பட்ட செட்டில் மென்ட் அடிப்படையில் தான் நான் தொகை கோரியுள்ளேன் என்றால் சரியல்ல. ரூ.15,380 தொகையினை அடிப்படை சம்பளமாக மேற்குறிபிட்ட செட்டில் மென்ட் அடிப்படையில் எடுத்து கொள்ள வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. அந்த ஒப்பந்ததின் படி தரஊதியம் ரூ.4,400/- என்று சொன்னால் சரியல்ல. நிர்வாகத்தின் கணக்கீட்டின் படி எனக்க உண்டான ஓய்வுதிய நிலுவை தொகை ரூ.42,862/- என்று சொன்னால் சரியல்ல. முன்கூட்டுத் தொகை ரூ.17,478/- தான் நிலுவையில் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி இரண்டு இனங்களிலும் சேர்த்து மொத்த நிலுவை தொகை ரூ.60,340/- மட்டும் தான் வழங்க வேண்டும் என்று சொன்னால் தவறானது ஆகும். மனுவில் எந்தவித அடிப்படை ஆதாரம் இல்லாமல் தொகையை மிகைப்படுத்தி கோரியுள்ளேன் என்றும், நிர்வாகம் ஒப்புக்கொண்ட தொகையை தவிர வேறு தொகையை பெற எனக்கு தகுதியில்லை என்று சொன்னால் சரியல்ல.

Sd/- .............. (RW1)

Sd/- N. Logeswaran,
Presiding Officer,
Labour Court, Salem